செய்தி வெளியீடு எண்: 613 நாள் : 11.11.2013

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாநில விலை கண்காணிப்புக்குழு கூட்டம் இன்று 11.11.2013 சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைச் செயலாளர், உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர், நிதித்துறை முதன்மைச் செயலாளர், வேளாண்மைத் துறைச் செயலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், விலைக் கண்காணிப்புக்குழு தனி அலுவலர், சென்னை மண்டல இந்திய உணவுக் கழக பொது மேலாளர், தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் அரிசி உள்ளிட்ட வெளிச்சந்தை பொருள்களின் விலை நிலவரம் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்திய உணவுக் கழகம் 6 மாதங்களுக்குத் தேவையான அரிசியை இருப்பில் வைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. விலைவாசி உயர்வு என்பது ஒரு சமுதாய பொருளாதாரப் பிரச்சினையாகும். வெங்காயம் மற்றும் தக்காளி விலையினை தினசரி கண்காணிக்கவும், வெளி மாநிலங்களிலிருந்து வரும் காய்கறிகளின் வரத்தை தொடர்ந்து கண்காணிக்கவும் வலியுறுத்தப்பட்டது. விலைவாசி உயர்வினை கட்டுப்படுத்தி அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் தட்டுப்பாடின்றி, அவர்கள் வாங்கும் சக்திக்கேற்ற விலையில், தொடர்ந்து கிடைத்திடுவதை உறுதி செய்யவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

(1) தமிழகத்திற்கு உரிய பங்கு காவிரி நீரை கர்நாடகம் தர மறுத்ததால் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக அரிசியின் விலை வெளிச்சந்தையில் கட்டுப்பாடின்றி உயர ஆரம்பித்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விலைக்கட்டுப்பாடு நிதியத்திலிருந்து 3 கோடி ரூபாயை விடுவித்து மேற்கு வங்க மாநில அரசு அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை கழகத்திடமிருந்து 1000 மெ.டன் புழுங்கல் மற்றும் பச்சரிசியை கொள்முதல் செய்து கூட்டுறவு மற்றும் அமுதம் சிறப்பங்காடிகள் மூலம் விற்பனை செய்ய உத்தரவிட்டார்கள். இதன்படி மிக சன்னரக மினிகிட் அரிசி கிலோ ரூ.31/—க்கும், ஸ்வர்ணரக அரிசி ரூ.25/—க்கும் விற்பனை செய்யப்பட்டதன் காரணமாக வெளிச்சந்தையில் அரிசியின் விலை கிலோ ஒன்றிற்கு ரூ.2/— முதல் ரூ.4/— வரை குறையத்தொடங்கியது.

(2) வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயரும்பொழுது அதனை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், 20 ரூபாய்க்கு ஒரு கிலோ தரமான அரிசி விற்பனை செய்யப்படுமென்று தமிழக சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதன்படி 17.04.2013 அன்று வெளிச்சந்தை அரிசி விற்பனை நிலையங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின்

திருக்கரங்களால் துவக்கி வைத்தார்கள். இன்று வரை 279 கூட்டுறவு மற்றும் அமுதம் சிறப்பங்காடிகள் மூலம் 58,000 குவிண்டால் வெளிச்சந்தை அரிசி ரூ.11.60 கோடிக்கு விற்பனை செய்யப் பட்டுள்ளது.

(3) பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் விலையைக் குறைக்கும் வகையில் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் 13,915 மெ.டன் துவரம்பருப்பும், 10,430 மெ.டன் உளுத்தம்பருப்பும், 1.72 கோடி செறிவூட்டப்பட்ட பாமாயில் பாக்கெட்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பருப்பு வகைகள் ஒரு கிலோ ரூ.30/– என்ற விலையிலும், ஒரு லிட்டர் பாமாயில் பாக்கெட் ரூ.25/– என்ற விலையிலும் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**மத்திய அரசு சிறப்பு பொது விநியோகத் திட்டங்களுக்கு வழங்கி வந்த மானியத்தை நிறுத்திவிட்ட போதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மானிய விலையில் பொருள்களை வழங்கும் இத்திட்டத்தை 31.03.2014 வரை நீட்டித்து உத்தரவிட்டுள்ளார்கள்.**

மேலும், வெளிச்சந்தையில் இவ்வகைப் பொருட்களைப் பதுக்கி விலையேற்றத்திற்குக் காரணமாகின்ற வணிகர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, **வியாபாரிகள் வசமுள்ள சரக்கு இருப்புக்கு உச்சவரம்பு விதிக்கும் அரசாணை 30.11.2013 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.** இதனால் இப்பொருள்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கிறது.

(4) மிளகாய், புளி போன்ற பொருள்களை அவை விளைவிக்கப்படும் இடங்களிலேயே, உற்பத்தியாளர்– களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு விலைக்கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு குறைந்த விலையில் கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. **விலைக்கட்டுப்பாட்டு நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்த 50 கோடி ரூபாயை 100 கோடி ரூபாயாக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

தற்போது வெளிச்சந்தையில் ரூ.100/–க்கு விற்பனை செய்யப்படும் புளியின் விற்பனை விலையை கட்டுக்குள் வைத்திருக்க தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் ஆகிய இடங்களில் புளி உற்பத்தியாளர்கள் மற்றும் மொத்த வணிகர்களிடமிருந்து கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு ஒரு கிலோ புளி ரூ.60/–என்ற விலையில் கூட்டுறவு மற்றும் அமுதம் சிறப்பங்காடிகள் மூலம் விற்பனை செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்கென விலைக்கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து ரூ.3.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

(5) காய்கறி விலையைக் கட்டுப்படுத்தும் வகையில், நகர்ப்புற பகுதிகளில், கூட்டுறவு அமைப்புகள் மூலமும், தோட்டக்கலைத் துறை மூலமும் விவசாயிகளையும், நுகர்வோரையும், நேரடியாக இணைக்கக் கூடிய பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் துவங்கப்பட்டுள்ளன. இந்தக் கடைகளில் சந்தை விலையைவிட குறைவான விலையில் காய்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. இன்று

வரையில் சென்னை மாநகரில் இயங்கி வரும் 39 கூட்டுறவு மற்றும் அமுதம் சிறப்பங்காடிகள் மூலம் 21 இலட்சத்து 78 ஆயிரம் கிலோ காய்கறிகள் 6 கோடியே 26 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் ஏனைய மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவு படுத்தி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவுப்படி, முதற்கட்டமாக கோவை மாநகரில் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் துவக்க 10 இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இக்கடைகள் விரைவில் செயல்படத் துவங்கும்.

(6) நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச ஆதார விலை குறைந்த விலையாகவே இருப்பதைக் கருத்தில் கொண்டு மாநில அரசின் ஊக்கத் தொகையாக சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.70/–ம், சாதா ரக நெல்லுக்கு ரூ.50/–ம் வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

(7) எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சியத்திற்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு உற்பத்திக்கும், தேவைக்கும் இடையே ஒரு சமநிலையை (Equilibrium) உருவாக்கி வருவதுடன், உற்பத்தியாளர்கள் அனைவரும் தங்களது விலை பொருளை உற்பத்தி விலைக்கும் கீழே விற்பனை செய்வதிலிருந்து(Distress sale) காத்து அவர்களின் விலை பொருள்களுக்கு உரிய கட்டுப்படியான விலை கிடைத்திடவும் வழி செய்கிறது. நுகர்வோருக்கும் அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் தடையின்றி, குறைந்த விலையில் கிடைப்பதும் உறுதி செய்யப்பட்டு, தமிழக மக்கள் அனைவருக்கும் முழுமையான, உண்மையான உணவுப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9